# TNPSC TET SI EXAM

## 7ஆம் வகுப்பு சமூக அறிவியல் தேர்வு வரலாறு

7th Standard

58 x 1 = 58

1) _________என்பவை பாறைகள், கற்கள், கோவில்சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.

(a) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் (b) பயணக்குறிப்புகள் (c) நாணயங்கள் (d) பொறிப்புகள்

2) கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் _____________ ஆகும்.

(a) வேளாண்வகை (b) சாலபோகம் (c) பிரம்மதேயம் (d) தேவதானம்

3) ________ களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.

(a) சோழர் (b) பாண்டியர் (c) ராஜபுத்திரர் (d) விஜயநகர அரசர்கள்

4) முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் ______________ ஆகும்.

(a) அயினி அக்பரி (b) தாஜ் - உல் – மா -அசிர் (c) தசுக்-இ-ஜாஹாங்கீரி (d) தாரிக் – இ - பெரிஷ்டா

5) அராபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் __________ ஆவார்.

(a) மார்க்கோபோலோ (b) அல் -பரூனி (c) டோமிங்கோ பயஸ் (d) இபன் பதூதா

6) ‘பிருதிவிராஜ ராசோ’ எனும் நூலை எழுதியவர் யார்?

(a) கல்ஹணர் (b) விசாகதத்தர் (c) ராஜசேகர் (d) சந்த் பார்தை

7) பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் யார்?

(a) முதலாம் போஜா (b) முதலாம் நாகபட்டர் (c) ஜெயபாலர் (d) சந்திரதேவர்

8) கஜினி என்னும் ஒரு சிறிய அரசு எங்கு அமைந்திருந்தது?

(a) மங்கோலியா (b) துருக்கி (c) பாரசீகம் (d) ஆப்கானிஸ்தான்

9) கஜினி மாமூதின் படையெடுப்பிற்கு முக்கியக் காரணம் யாது?

(a) சிலை வழிபாட்டை ஒழிப்பது (b) இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது.
(c) இந்தியாவில் இஸ்லாமைப் பரப்புவது. (d) இந்தியாவில் ஒரு முஸ்லீம் அரசை நிறுவுவது.

10) பிற்கால சோழ வம்சத்தை மீட்டெழச் செய்தவர் யார்?

(a) விஜயாலயன் (b) முதலாம் ராஜராஜன் (c) முதலாம் ராஜேந்திரன் (d) அதிராஜேந்திரன்

11) கீழ்க்காணும் பாண்டிய அரசர்களுள், களப்பிரர் ஆட்சியை முடித்துவைத்தவர் என அறியப்படுபவர் யார்?

(a) கடுங்கோன் (b) வீரபாண்டியன் (c) கூன்பாண்டியன் (d) வரகுணன்

12) கீழ்க்காண்பனவற்றுள் சோழர்களின் நிர்வாகத்தில் மிகச் சிறிய அலகு எது?

(a) மண்டலம் (b) நாடு (c) கூற்றம் (d) ஊர்

13) விஜயாலயன் வழி வந்த சோழ வம்சத்தின் கடைசி அரசர் யார்?

(a) வீர ராஜேந்திரன் (b) ராஜாதிராஜா (c) அதி ராஜேந்திரன் (d) இரண்டாம் ராஜாதிராஜா

14) சோழர்களின் கட்டடக்கலைக்கான எடுத்துக்காட்டை எங்குக் காணலாம்?

(a) கண்ணாயிரம் (b) உறையூர் (c) காஞ்சிபுரம் (d) தஞ்சாவூர்

15) கீழ்க்காண்பனவற்றுள் எந்த இந்தியப் பகுதிக்கு மார்க்கோபோலோ 13ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சென்றார்?

(a) சோழமண்டலம் (b) பாண்டிய நாடு (c) கொங்குப்பகுதி (d) மலைநாடு

16) _______ மாம்லுக் அரச வம்சத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

(a) முகமதுகோரி (b) ஜலாலுதீன் (c) குத்புதீன் ஐபக் (d) இல்துமிஷ்

17) குத்புதீன் தனது தலைநகரை _____________ லிருந்து டெல்லிக்கு மாற்றினார்.

(a) லாகூர் (b) புனே (c) தொலைதாபாத் (d) ஆக்ரா

18) _______ குதுப்மினாரின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்தார்.

(a) ரஸ்ஸியா (b) குத்புதீன் ஐபக் (c) இல்துமிஷ் (d) பால்பன்

19) டெல்லிக்கு அருகே துக்ளகாபாத் நகருக்கான அடிக்கல்லை நாட்டியவர் _____________ ஆவார்.

(a) முகமதுபின் துக்ளக் (b) பிரோஷ் ஷா துக்ளக் (c) ஜலாலுதீன் (d) கியாசுதீன்

20) பிராமணரல்லாத உடமையாளருக்குச் சொந்தமான நிலங்கள்

(a) வேளாண்வகை (b) பிரம்ம தேயம் (c) சாலபோகம் (d) தேவதானம்

21) உத்திரமேரூர் கல்வெட்டுக்கள் தெரிவிப்பவை

(a) நீதி நிர்வாகம் (b) நிதி நிர்வாகம் (c) கிராம நிர்வாகம் (d) இராணுவ நிர்வாகம்

22) வளைவுகள் மற்றும் குவி மாடங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியவர்கள்

(a) சோழர்கள் (b) முகலாயர்கள் (c) விஜயநகரப் பேரரசர்கள் (d) டெல்லி சுல்தான்கள்

23) தேவாரம் மற்றும் திருவாசகம் ஆகியவை தொகுக்கப்பட்ட காலம்

(a) சேரர்கள் காலம் (b) சோழர்கள் காலம் (c) பாண்டியர் காலம் (d) பல்லவர்கள் காலம்

24) இந்தியாவில் நிலவிய சதி எனும் பழக்கம் பற்றி கூறியுள்ளவர்

(a) மார்க்கோபோலோ (b) அல் பருனி (c) இபன் பதூதா (d) நிகோலா கோண்டி

25) சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட
நிலங்கள்_______அழைக்கப்படுகிறது.

(a) தேவதானம் (b) பள்ளிச்சந்தம் (c) வேளாண்வகை (d) சாலபோகம்

26) முதல் நிலை சான்றுகள்________

(a) நினைவுச்சின்னங்கள் (b) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் (c) பயணக்குறிப்புகள் (d) இலக்கியங்கள்

27) கொனார்க் கோவில் அமைந்துள்ள இடம் ______

(a) மத்தியபிரதேசம் (b) தமிழ்நாடு (c) இராஜஸ்தான் (d) ஒடிசா

28) 'தேவாரம்' யாரால் இயற்றப்பட்டது.

(a) நாதமுனி (b) சம்பந்தர் (c) நம்பியாண்டார் நம்பி (d) மாணிக்கவாசகர்

29) கூர்ஜரப் பிரதிகாரர் மரபினைத் தோற்றுவித்தவர்

(a) ஹரிச்சந்திரா (b) வத்சராஜா (c) நாகபட்டர் (d) தேவ பாலர்

30) பாலர் வம்சத்தினைத் தோற்றுவித்தவர்

(a) தர்ம பாலர் (b) தேவ பாலர் (c) கோபாலர் (d) மகி பாலர்

31) தேவபாலர் ஆதரித்த மதம்

(a) சீக்கிய மதம் (b) இந்து மதம் (c) பௌத்த மதம் (d) சமண மதம்

32) கஜினி மாமூதுவால் தோற்கடிக்கப்பட்ட ஷாகி அரசர்

(a) ஜெயச்சந்திரா (b) ஜெய பாலர் (c) ராஜ்ய பாலர் (d) ஜெய சுந்தர்

33) முகமது கோரியின் திறமை வாய்ந்த தளபதி

(a) பால்பன் (b) இல்டுமிஷ் (c) நாசிர் உதீன் (d) குத்புதீன் ஐபக்

34) கூர்ஜர அரச வம்சத்தை தோற்றுவித்தவர் யார்?

(a) முதலாம் நாகபட்டர் (b) ராமபத்திரா (c) மிகிரபோஜா (d) ஹரிச்சந்திரா

35) சௌகான் வம்சாவளி அரசர்களுள் தலைசிறந்தவர்_______ ஆவார்.

(a) சிம்மராஜ் (b) பிருதிவிராஜ் (c) வத்சராஜ் (d) முகமது கோரி

36) ராஜபுத்திரர்களின் ஏரியின் நடுவே உள்ள அரண்மனை எங்கு அமைந்துள்ளது?

(a) உதய்பூர் (b) ஜெய்ப்பூர் (c) குவாலியர் (d) ஜோத்பூர்

37) _______ ஆம் ஆண்டு முகமது பின் காசிம் சிந்துவின் மீது படையெடுத்தார்.

(a) கி.பி 1712 (b) கி.பி 712 (c) கி.பி 1191 (d) கி.பி 1175

38) பூஜ்யத்தின் முக்கியத்துவத்தை மேலைநாட்டினர்______ விடமிருந்தே கற்றுக்கொண்டனர்.

(a) அராப் (b) சீனா (c) இந்தியா (d) ஐரோப்பா

39) கஜினி முகமது இந்தியாவின் மீது______ முறை படையெடுத்தார்.

(a) 14 (b) 15 (c) 7 (d) 17

40) திருஞான சம்பந்தரால் சமணமத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டவர்.

(a) அரிகேசரி (b) முதலாம் பராந்தகர் (c) விஜயாலயர் (d) இரண்டாம் ராஜசிம்மர்

41) சோழ மன்னர்கள் மிகுதியாகப் பற்று கொண்டிருந்தது.

(a) புத்த சமயம் (b) சமணமதம் (c) சைவ சமயம் (d) வைஷ்ணவம்

42) பாண்டியர்களின் தலைநகர்

(a) உறையூர் (b) மதுரை (c) கொற்கை (d) தஞ்சாவூர்

43) பாண்டியர் காலத்துக் கடல்சார் வணிகம் பற்றி புகழ்ந்துள்ளவர்

(a) மார்க்கோபோலோ (b) மெகஸ்தனிஸ் (c) அல்பரூனி (d) யுவான் சுவாங்

44) மார்க்கோபோலோ ________ லிருந்து இந்தியாவுக்கு வந்தார்.

(a) சீனா (b) வெனிஸ் (c) கிரீஸ் (d) போர்ச்சுக்கல்

45) சோழப் பேரரசின் வலிமை மிக்க பேரரசர்

(a) அதி ராஜேந்திரன் (b) முதலாம் ராஜராஜா (c) முதலாம் ராஜேந்திரா (d) ராஜாசிம்கா

46) கங்கை கொண்ட சோழபுரம் கோவிலைக் கட்டியவர்

(a) முதலாம் ராஜராஜா (b) முதலாம் ராஜேந்திரா (c) இரண்டாம் ராஜராஜா
(d) இரண்டாம் ராஜேந்திரா

47) பொருத்தமில்லாத ஒன்றைக் கண்டுபிடி.

(a) கடுங்கோன் (b) கூன் பாண்யடின் (c) வரகுணா (d) விஜயாலாயா

48) முதலாம் ராஜேந்திரன் வேதக் கல்லூரி நிறுவிய இடம்

(a) தஞ்சாவூர் (b) எண்ணாயிரம் (c) தாராசுரம் (d) பாண்டிச்சேரி

49) மாம்லுக் என்ற அராபிய வார்த்தையின் பொருள்

(a) எஜமான் (b) அடிமை (c) சக்தி (d) வெற்றி

50) இபன் பதூதா ________ நாட்டுப் பயணி

(a) சீனா (b) கிரீஸ் (c) மொராக்கோ (d) போர்ச்சுக்கல்

51) தைமூர் இந்தியாவின் மீது படையெடுத்த ஆண்டு

(a) 1398 (b) 1368 (c) 1389 (d) 1498

52) சையது வம்சத்தைத் தோற்றுவித்தவர்

(a) ஆலம்ஷா (b) முகமது ஷா (c) முபாரக் ஷா (d) கிசிர்கான்

53) முதல் பானிபட் போர் நடைபெற்ற ஆண்டு

(a) 1556 (b) 1526 (c) 1625 (d) 1562

54) 40 பேர்கள் கொண்ட குழுவை துவங்கியவர்.

(a) அய்பக் (b) பால்பன் (c) ரஸ்ஸியா (d) இல்துமிஷ்

55) வங்காளத்தின் மண்டல ஆளுநர்

(a) துகிரில் கான் (b) ஜலால் உதீன் (c) அலாவுதீன் (d) கைகுவாபாத்

56) அலாவுதீன் - கில்ஜியின் தலைமைத் தளபதி

(a) ராமச்சந்திரா (b) மாலிக்கபூர் (c) கியாஸ் உட்தீன் (d) பக்தியார் கால்ஜி

57) முகம்மது பின் துக்ளக் வெளியிட்ட புதிய நாணயம்

(a) வெள்ளி (b) தங்கம் (c) செம்பு (d) வெங்கலம்

58) பானிபட் போர் நடைபெற்ற ஆண்டு

(a) 1528 பொ.ஆ (b) 1175 பொ.ஆ (c) 1451 பொ.ஆ (d) 1526 பொ.ஆ

67 x 1 = 67

59) ________ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.

60) தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர்_____ ஆவார்.

61) ஒரு __________ என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது.
62) அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர்________ ஆவார்.
63) கி.பி.1420 இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலியப் பயணி __________ ஆவார்.
64) விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர்_______ ஆவார்.
65) கி.பி _____________ இல் சிந்துவை அரேபியர் கைப்பற்றினர்.
66) ஆஜ்மீர் நகரத்தை நிர்மாணித்தவர் _____________ ஆவார்.
67) காந்தர்யா கோவில் _____________ ல் அமைந்துள்ளது.
68) ________ தஞ்சாவூரிலுள்ள புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை நிர்மாணித்தார்.
69) ______ வேதக் கல்லூரி ஒன்றை எண்ணாயிரத்தில் நிறுவினார்.
70) ________ வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.
71) பாண்டியப் பேரரசின் அரசுச் செயலகம் ___________என அறியப்பட்டது
72) துக்ளக் அரச வம்சத்தைத் தோற்றுவித்தவர்______ ஆவார்.
73) முகமது பின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து __________ க்கு மாற்றினார்.
74) புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர் அமிர் குஸ்ருவை __________ ஆதரித்தார்.
75) டெல்லியிலுள்ள குவ்வத் உல் இஸ்லாம் மசூதியை __________ கட்டினார்.
76) இந்தியாவிற்கு செங்கிஸ்கான் தலைமையிலான மங்கோலியரின் அச்சுறுத்தல் __________ ஆட்சியின் போது ஏற்பட்டது.
77) பொறிப்புகள் என்பவை ________ மேல் பொறிக்கப்படும் எழுத்துக்களாகும்.
78) பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ________ எனப்பட்டன.
79) பிரகதீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இடம் ________
80) சார்மினார் அமைந்துள்ள இடம் ________
81) தபகத் என்ற அரேபியச் சொல்லின் பொருள் ________
82) கல்வி நிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள்_______ என அழைக்கப்படுகிறது.
83) 48 ஜிட்டல்கள்_______ வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்.
84) தாரிக் அல்லது தாகுயூக் என்ற அராபியச்சொல்லின் பொருள்______ என்பதாகும்.
85) முகமது பின் துக்ளக் தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த_______ க்கு மாற்றினார்.
86) ராஜபுத்திரர்களின் கூட்டமைப்பு ________ எனப்பட்டது.
87) பால வம்சத்தின் மிகச் சிறந்த வலிமை மிக்க அரசர் ________ ஆவார்.
88) சௌகான் வம்சத்தைத் தோற்றுவித்தவர் ________ ஆவார்.
89) சௌகான்களின் தலைநகர் ________ ஆகும்.
90) இறைதூதர் முகமது நபி தோற்றுவித்த சமயம் ________
91) 'ராஜபுத்' எனும் சொல் 'ரஜ்புத்ர' எனும்_____ சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
92) ஜேம்ஸ்டாட் எனும் புலமையாளர் முக்கியமான____ ராஜபுத்திர அரசகுலங்களைப் பட்டியலிட்டுள்ளார்.
93) பால அரச வம்சத்தை உருவாக்கியவர்________
94) இரண்டாம் பால வம்சத்தை தோற்றுவித்தவர்_______
95) "பிருதிவிராஜராசோ" எனும் பெயரில் ஒரு நீண்ட காவியத்தை________ என்பவர் இயற்றினார்.
96) பந்தேல்கண்டிலுள்ள கஜீராகோ வளாகத்தில் மொத்தம்_______ கோவில்கள் அமைந்துள்ளன.
97) _______ என்னும் சொல்லுக்கு, இறைதூதர் முகமது நபிகளின் பிரதிநிதி என்று பொருளாகும்.
98) சோழப் பேரரசின் மாபெரும் வல்லமை பெற்ற பேரரசர் ________.
99) கங்கை கொண்டான் எனப் பெயர் பெற்றவர் ________.
100) குந்தவை ________ மகளாவார்.
101) பாண்டியர்களின் காலத்தில் நிலத்தின் உண்மையான உடைமையாளர்கள் ________ என அழைக்கப்பட்டனர்.
102) வீரசோமேஸ்வரரை சுந்தர பாண்டியன் ________ என்ற இடத்தில நடந்த போரில் தோற்கடிக்கப்பட்டார்.

103) பண்டைக் கால சோழ அரசின் தலைநகர்______

104) சமணசமய நிறுவனங்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் _____ என அழைக்கப்பட்டது.

105) சோழ அரசின் நில வரியானது ______ என அழைக்கப்பட்டது.

106) ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் ______ எனவும் அழைக்கப்பட்டான்.

107) பாண்டிய அரசில் இரண்டு முறை வருகை புரிந்த புகழ்பெற்ற பயணி _______ ஆவார்.

108) தமிழ்நாடு முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவந்த பாண்டிய அரசர் ______

109) பாண்டிய மன்னர்கள் ________ ஐ தங்களது தலைநகராக முன்னுரிமை கொடுத்து இருந்தனர்.

110) மதுரை பொதுமக்களால் ________ என்றே போற்றப்பட்டு வந்தது.

111) _______ என்ற ஊரில் உள்ள கல்வெட்டில் பாண்டிய அரசின் _______ தொடர்பான செய்திகளைக் கொண்டது.

112) பாண்டிய அரசின் கீழ் விறுவிறுப்பாக துறைமுகமாக ________ விளங்கியது.

113) அடிமை வம்சத்தின் ஆட்சிக்கான அடிக்கல்லை நாட்டியவர் _________

114) குதுப்மினாருக்கு அடிக்கல் நாட்டியவர் _________

115) கில்ஜி வம்சத்தின் முதல் அரசர் _________

116) முகமது பின் துக்ளக் தேவகிரியின் பெயரை _________ என மாற்றினார்.

117) இப்ராகிம் லோடி _________ என்பவரின் மகன் ஆவார்.

118) அடிமை வம்சம் இந்திய துணைக் கண்டத்தை ஆட்சி செய்த ஆண்டுகள்________

119) ______ என்பது இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்காக கொடுக்கப்பட்ட நிலமாகும்.

120) குதுப்மினார் கட்டுமான பணிகளை நிறைவு செய்தவர்_______

121) ரஸ்ஸியா________ எனும் எத்தியோப்பிய அடிமையை தனது தனி உதவியாளராக நியமித்தார்.

122) நாற்பதின்மர் என்ற பிரபுக்கள் குழுவை ஒழித்தவர்_______

123) ஈரான் நாட்டின் மங்கோலிய வைஸ்ராய்________

124) முகம்மது பின் துக்ளக்கின் உண்மையான பெயர்_______

125) இந்தியாவில் முகலாய பேரரசை நிறுவியவர்_____